முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள். 11.11.2025

O.S. No. 101/2023

வா.சா.1. குணசேகர்

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

வழக்கு சொத்து நான் எப்போது யாரிடமிருந்து விலைக்கு வாங்கினேன் என்றால் ராமசந்திரன் பூ -விடமிருந்து 1993 ஆம் ஆண்டு விலைக்க வா்ங்கினேன். ராமசந்திர பூவிற்கு விலைக்கு கொடுத்த இடத்திற்கு உள்ளே எவ்வளவு விஸ்தீரணம் பாத்தியம் இருந்தது என்றால் சுமார் 3 ஏக்கர் ஆகும். எனது வீட்டிற்கு மேற்கு பக்கம் முத்துக்குட்டியின் வீடும், அதற்கு கிழக்கு தங்கம், உள்ளார்கள். இந்த 3 வீடுகளை தவிர வேறு யார்க்கும் வீடு இல்லை. அந்த 3 ஏக்கர் சொத்திற்கு உள்ளே பிரதியின் குடும்ப வீடு 1 உள்ளது என்றால் சரி.

ராமச்சந்திர பூவை எத்தனை வருடமாக எனக்கு தெரியும் என்றால் எனக்கு நினைவு தெரிந்த சிறு வயது முதலே அவர்களை தெரியும். ராமச்சந்திர பூ குடும்பத்தில் நான் என் அப்பா பனையேறும் தொழில் செய்து வந்தார் என்றால் சரி. எனது வீட்டிற்கு கிழக்கேயும் மேற்கேயும் உள்ள நபர்களை இந்த வழக்கில் கட்சி சேர்க்கிவில்லை என்றால் சரி. அவர்களது பெயரில் உள்ள ஆவணங்களை ளநான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்திருக்கம் ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ள வழக்கு பாதையானது கிழக்கேயும் மேற்கேயும் உள்ள நபர்களின் ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளா இல்லையா என்ற விவரம் எனக்கு தெரியாது.

மேற்கேயும் கிழக்யேயும் உள்ள நபர்களின் பெற்றோர்களின் ராமசந்திர பூவிடம் வேலை பார்த்த நபர்கள் என்றால் முத்துக்குட்டி வேலை பார்த்துள்ளார். தங்கம் வேலை பார்த்துள்ளாரா என்ற விவரம் எனக்கு தெரியாது. தொண்டைமான் காலணி ரோட்டில்

இருந்து எவ்வளவு துரத்தில் 3 ஏக்கர் தூரத்தில் 3 ஏக்கர் பூமி உள்ளது என்றால் சுமார் 200 அடி இருக்கும். 3 ஏக்கர் பூமியில் இருந்து தொண்டைமான் காலணி ரோட்டை அடைய பஞ்சாயத்து ரோடு உள்ளது என்றால் சரி அந்த ரோடு எப்போது போடப்பட்டது என்றால் சுமார் 15 வருடம் இருக்கும். ராமசந்திர பூ என்பவர் பிரதியின் பாட்டி என்றால் சரி. ராமசந்திர பூ தானமாக கொடுத்த இடத்தில் பஞ்சாயத்து ரோடு வந்தது என்றால் சரிதான். அவரை போல் மற்றவர்களும் பஞ்சாயத்திற்கு இடம் கொடுத்துள்ளார்கள்.

ரோட்டடிற்கு இடம் கொடுத்த நபர்கள் பெயர்கள் என்ன என்றால் ஜெபமணி என்பவர் கொடுத்துள்ளார். மற்ற நபர்களின் பெயர்கள் எனக்கு தெரியாது. ஜெபமணி எவ்வளவு சொத்தை பாதைக்கு கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. அந்த ஜெபமணிக்கு 3 ஏக்கர் சொத்தை ஒட்டி இடம் உள்ளதா என்றால் உள்ளது.

பஞ்சாயத்து ரோட்டிற்கு தெற்கு பக்கம் ஜெபமணி இடம் உள்ளது. 15 வருடத்திற்கு முன்பாக தொண்டைமான் ரோட்டிலிருந்து 3 ஏக்கர் இடத்திற்கு செல்ல ஒற்றையடி பாதை மட்டுமே உள்ளது. என்றால் சரியல்ல. மற்றவர்களின் இடங்களுக்கு ஊடே நடந்து சென்றார்கள். வாகனங்கள் எதுவும் செல்லமுடியாது என்றால் சரி. எனக்கும் எனது வீட்டிற்கு கிழக்கு மேற்கு உள்ள நபர்களுக்கும் கிரய ஆவணங்கள் எழுதி இருந்ததாலும் நாங்கள் வேலை பார்த்ததன் அடிப்படையில் கொடுக்கப்பட்ட நிலம் என்றால் சரியல்ல. பிரதிபலன் வாங்காமல் கொடுக்கப்பட்ட இடம் என்றால் சரி.

எங்கள் வீட்டின் பின்புறம் 2/12 என்ற ஒரு வீடு உள்ளது என்றால் சரி. மொத்த சொத்திற்கும் உள்ளே எத்தனை வீடுக்ள் உள்ளது என்றால் 6 வீடுகள் உள்ளது. யார் யார் வீடு என்றால் பாக்கிய செல்வி வீடு, சரஸ்வதி வீடு, கவியரசு வீடு , என்னுடைய வீடும் கிழக்கு மேற்கே வீடும் உள்ளது. பாக்கிய செல்வி மட்டும் இந்த வழக்கில் நான் கட்சி

சேர்க்கவில்லை எநன்றால் சரி. என் வீட்டிற்கு பின்பக்கம் நான் மரபட்டறை வைத்து தெர்ழில் செய்து வருகிறேன் என்கனறால் சரி. அந்த மரப்பட்டறை 2 சென்ட் இடத்தில் உள்ளது. அந்த மரப்பட்டறைக்கு நான் தொழில் வரி செலுத்தி வருகிறேன் என்றால் சரி. இந்த இடமானது குடியிருப்பு இடம் அல்லாத வணிக இடம் என்றால் சரி. அந்த மரப்பட்டறைக்கு தனியாக வணிக கணக்கீட்டில் மின் இணைப்பு ெபற்றுள்ளேன்என்றால் சரி. எனது வீட்டிற்கு தனியாக மின் இணைப்பு பெற்றுள்ளேன் என்றால் சரி.

மரப்பட்டறை தொழிலை நான் எத்தனை வருடம் நடத்தி வருகிறேன் என்றால் 20 வருடத்திற்கு முன்பாக இருக்கும். பஞ்சாயத்து ரோடு போடுவதற்கு முன்பாகவே நான் மரப்பட்டறை தொழில் செய்து வருகேிறன் என்றால் சரி. நான் தாக்கல் செய்துள்ள ஆவணம் முழுவதும் படித்துள்ளேன். பாதைக்கான ஆவணத்தில் எத்தனை அடி பாதை என்று சொல்லப்படவில்லை என்றால் சரி.

வா.,சா,ஆ 11 ஆவண புகைப்படத்தில் உள்ள தென்னம்பிள்ளையிலிருந்து என்னுடைய வீட்டிற்கு எத்தனை அடி துரம் இருந்தது என்றால் 10 அடி துரம் இருக்கும். வா.சாஆ 11 புகைப்படத்தில் உள்ள தென்னம்பிள்ளைகள் அனைத்தும் பிரதியின் தென்னம்பிள்ளைகள் என்றால் சரி. என்னுடைய மரப்பட்டறை வழக்கில் குறிப்பிட்டுள்ள பாதையை தவிர வேறு பாதைகள் உள்ளது என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ளவாறு பாதை என்பதே ஸ்தலத்தில் இல்லைஎன்றாலும் அவ்வாறு இருந்திருந்ததால் பஞ்சாயத்து பாதையானது அந்த பாதை வரை நீட்டப்பட்டிருக்கும் என்றாலும் சரியல்ல. ராமசந்திர பூவிற்கும் நான் வேலை பார்த்த காரணத்தை கருத்தில் கொண்டு அவர்கள் நிலத்தின் ஊடே சென்றுவர எங்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டது என்றாலும் உண்மையில் பாதை கொடுத்திருந்தால் 12 அடி

பாதையை தெளிவாக ஆவணத்தில் சொல்லியிருப்பார்கள் என்றாலும அவ்வாறு சொல்லாததால் பாதை அவகாசம் எங்களுக்கு கொடுக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல.

நாங்கள் வீடு கட்டும் காலகட்டத்தில் பிரதியின் நிலத்தின் ஊடே போக்குவரத்திற்காக அனுமதி பெற்ற சென்று வந்தோம் என்றால் சரியல்ல. இந்த பாதை அவகாசம் நான் கோரியுள்ளது போல கிடைக்கத்தக்கது அல்ல என்பதால் தான் எனக்கு கிழக்கேயும் மேற்கேயும் உள்ள நபர்கள் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது.

அவர்களை கட்சி சேர்த்தால் உண்மையில் பாதை இல்லை என்ற விவரத்தை வழக்கில் சொல்லிவிடுவார்கள் என்பதற்காக அவர்களை வேண்டும் என்றே கட்சி சேர்க்காமல் இருந்தேன் என்றால் சரியல்ல. எங்களது 3 வீட்டை தவிர மற்ற இடங்கள் அனைத்தும் பிரதிவாதியின் தோட்டமாக அனுபவித்து வருவதால் அதன் ஊடே பாதை அதில் கிடையாது என்றால் சரியல்ல.

பிரதியின் தோட்டத்தில் 175 தென்னம்பிள்ளைகள் உள்ளது என்றால் சரி . அதில் மாமரங்கள் உள்ளது என்றால் சரி. பஞ்சாயத்து ரோட்டில் வந்து பின்பு அதிலிருந்து பத்திரத்தில் உள்ளதை போல் எங்கள் சொத்திற்க வந்து செல்வதற்கு அபோக்குவரத்து ெசய்ய பிரதிவாதிகளுக்கு எநத ஆட்சேபனை இல்லை என்றால் சரியல்ல. எனக்கு அவ்வாறு இருந்தால் தொழில் ெசய்வதற்கு ஒத்துவராது.

பஞ்சாயத்து ரோடு பிரதிவாதியின்நிலத்தின் எல்லையை ஒட்டியுள்ளது என்றால் சரி. பஞ்சாயத்து ரோடு பிரதியின் நிலத்தை ஒட்டியதிலிருந்து என்னுடைய வீடு 50 அடி துரத்தில் இருக்கும். என்னுடைய தொழில் கூடத்தை அங்கு நடத்தி வர பிரதி அனுமதிக்க முடியாது என்றும் என்னுடைய தொழிலுக்காக மட்டுமே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டடுள்ளது

என்றால் வழக்கின் பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

சட்டடிப்படி வழக்கு சொத்தானது விவசாய பூமியாக வரையறை செய்யப்பட்டடுள்ளதால் அதில் வணிக வேலையை அனுமதிக்க முடியாது என்றால் சரியல்ல. வழக்கு பி பட்டிகை சொத்து காண்பிப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் மரப்பட்டறையை நான் பி பட்டிகை சொத்தாக விவரித்துள்ளேன். பி பட்டிகை சொத்து 840 சதுர அடி வீஸ்தீரணம் இருப்பைதை நான் காண்பிக்க ஆவணங்கள் உள்ளது என்றால் தெரியாது. பி பட்டிகை என்ற சொத்தே பூமியில் இல்லை என்றால் இல்லாத சொத்திற்கு வழக்கு தாக்கல் ெசய்யப்பட்டுள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

பஞ்சாயத்து ரோட்டிலிருந்து என்னுடைய வீட்டீற்கு இடையே உள்ள 50 அடி இடமானது பிரதியின் இடம் என்றால் சரி. பிரதிவாதிகள் நீதிமன்றத்தை அவமதிக்கும் நபர்கள் என்றாலும் மதித்து நடக்கும் நபர்கள் என்றால்லும் சரியல்ல. வழக்கிற்கு வழக்கின் மூலம் எதுவும் இல்லை என்றால் சரியல்.ல. பிரதிகளின் சொத்தை அபகரிக்க பாதை இருப்பதாக கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.